**ஸ்ரீமதே ராமாநுஜாய நம:|**

# The Known and The Unknown

-----------------------------------------

## Episode-014 (1 of 3)

## ஸ்வாமி தேஶிகன் அநுபவித்த யதி ஸார்வபௌமர்

==========================================

நம் தூப்புல் வள்ளல் ஸ்வாமி தேஶிகன், விஶிஷ்டாத்வைத தர்ஶந ஸ்தாபகரான ஸ்ரீ பகவத் பாஷ்யகாரரைப் போற்றித் துதித்து, "கவி–தார்கிக–ஸிம்மம்" என்ற தனது பிருதுக்கு ஏற்புடையதான **"யதிராஜ ஸப்ததி"** என்னும் ஸ்தோத்ரத்தை அருளிச் செய்தது நாம் அனைவரும் அறிந்ததே.

ஸ்வாமி தேஶிகன், யதிராஜ ஸப்ததியில், பகவத் ராமாநுஜருக்கு முன்புள்ள குருபரம்பரையிலுள்ள நம் பூர்வாசார்யர்களான ஒன்பது பேர்களை (பெருமாள், பிராட்டி, விஷ்வக்ஸேநர், நம்மாழ்வார், நாதமுநிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி) ஒன்பது ஸ்லோகங்களில் அவரோஹண க்ரமத்தில் (இறங்கு வரிசையில்) அநுபவித்த பின்னர், பத்தாவது ஸ்லோகம் தொடங்கி யதிராஜரான ஸ்ரீ பகவத் ராமாநுஜரை ஸ்தோத்ர நாயகனாய்க் கொண்டு, அவரின் அருமை பெருமைகளை பரக்கப் பேசித் தானும் அநுபவித்து நம்மையும் அநுபவிக்க வைக்கின்றார்.

**"ஸ்ரீமந் நாராயண ஏவ சித் அசித் விஶிஷ்ட: அத்வைதம் தத்வம். பக்தி ப்ரபத்திப்யாம் ப்ரஸந்நஸ்ஸ ஏவ உபாய:, அப்ராக்ருத தேஶ விஶேஷ விஶிஷ்டஸ்ஸ ஏவ ப்ராப்ய இதி வேதாந்த வாக்யை:"**

என்பதன்றோ நம் யதீந்த்ர மதம். "அறிவுள்ள ஜீவாத்மாக்களான சேதனர்களையும், அறிவற்றவைகளான அசேதனங்களையும் தனக்கு ஶரீரமாகக் கொண்டு, பிரிக்க முடியாதபடி சேர்ந்திருக்கின்ற ஸ்ரீயோடு கூடிய நாராயணன் ஒருவனே தத்வம். பக்தியினாலோ அல்லது ப்ரபத்தியினாலோ மட்டுமே ஸந்தோஷம் அடைந்த அவனே, ஜீவன்கள் அடைய வேண்டிய புருஷார்த்தத்திற்கு உபாயம். பிரகிருதிக்கு மேற்பட்ட தேஶமான ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் அவனே ஜீவாத்மாக்களால் அடையப்பட வேண்டியவன்" என்று வேதாந்த வாக்கியங்கள் கூறுகின்றன. இதுவே நம் தர்ஶந ஸ்தாபகரின் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தம்.

வேதாந்த வாக்கியங்களான உபநிஷத்துக்கள் மற்றும் பிரும்ம ஸூத்ராதிகள் ஶ்ருதியை ஆதாரமாகக் கொண்டுள்ளன. ஶ்ருதியானது, அபேத ஶ்ருதி என்றும், பேத ஶ்ருதி என்றும், கட ஶ்ருதி என்றும் மூன்று வகைப்படும். பரப்ரும்மத்தைத் தவிற வேறொன்றுமில்லை என்பதே அபேத ஶ்ருதி. அசேதன தத்வம் வேறு, சேதன தத்வம் வேறு, பரமாத்மா வேறு என்பதே பேத ஶ்ருதி. பரமாத்மா ஶரீரியாகவும் (ஆத்மாவாகவும்), பரமாத்மாவிற்கு, சேதனாசேதனங்கள் ஶரீரமாகவும் உள்ள விஶிஷ்டமான (சேர்ந்திருப்பதான) ஏக தத்வம் என்பதே கட ஶ்ருதி.

**அபேத** **ஶ்ருதியை** மட்டுமே தங்களுக்கு ப்ரமாணமாகக் கொண்டிருப்பது **அத்வைதம்.** **பேத** **ஶ்ருதியை** மட்டுமே தங்களுக்கு ப்ரமாணமாகக் கொண்டிருப்பது **த்வைதம். கட** ஶ்ருதியை அதாவது **பேத மற்றும் அபேத** அனைத்து ஶ்ருதிகளையுமே தங்களுக்கு ப்ரமாணமாகக் கொண்டிருப்பது விஶிஷ்டாத்வைதம்.

இவ்விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை வேத காலம் தொட்டே ஸ்ரீபராஶரர், வ்யாஸர், போதாயனர், குஹதேவர், பாருசி, ப்ரஹ்மநந்தி, த்ரமிடாசார்யர், நம்மாழ்வார், நாதமுநிகள், ஆளவந்தார் போன்றவர்கள் அநுஷ்டித்துள்ளனர். இதையே நம் பகவத் ராமாநுஜரும் இப்படிப்பட்ட மிகத் தொன்மையான ஸநாதன தர்மத்தைப் பின்பற்றி நமக்கு அவற்றின் உட்கருத்துக்களையெல்லாம் தனது நவ க்ரந்தங்களான ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம், வேதார்த்த ஸங்க்ரஹம், வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம், ஶரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், வைகுண்ட கத்யம், நித்யம் ஆகியவைகளில் அருளிச் செய்துள்ளார். அத்வைதம் போன்றோ அல்லது த்வைதம் போன்றோ இடையில் வந்த ஸித்தாந்தமல்ல நம் விஸிஷ்டாத்வைத ஸித்தாந்தம்.

"நான்கு வேதங்களின் உண்மையான அர்த்தங்களையெல்லாம் அழித்து நாசம் செய்த குத்ருஷ்டிகளையும், குமதிகளையும் தரையில் போட்டு மிதித்து த்வம்ஸம் பண்ணுகின்ற ஒரு யானையைப் போன்று, அம்மாயாவாதிகளின் வாதங்களையெல்லாம் பொடிப்பொடியாக்கிய இராமாநுச முநியின் உபதேஶங்களையும் ஸ்ரீ ஸூக்திகளையும் நம் நெஞ்சிலே எப்பொழுதும் ஸ்மரித்துக் (நினைத்துக்) கொண்டிருக்கும் நாம், ஒரு தீவினையை (கெட்ட செயலை) சிந்திப்போமா என்ன? ஒருக்காலும் சிந்திக்க மாட்டோம்" என்பதை,

**ஆரண நூல் வழிச் செவ்வை அழித்திடும் ஐதுகர்க்கு, ஓர்**
**வாரணமாய் அவர் வாதக் கலிகள் மாய்த்த பிரான்**
**ஏர் அணி கீர்த்தி இராமாநுச முநி இன் உரை சேர்**
**சீரணி சிந்தையினோம், சிந்தியோம் இனித் தீவினையே**

என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தின் ஆரம்பத்திலேயே அருளிச் செய்திருக்கிறார் நம் ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி தேஶிகன்.

நம் தர்ஶந ஸ்தாபகரான யதிராஜர், மற்ற ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த யதிகளைக் காட்டிலும் எவ்விதத்தில் வேறுபடுகிறார் என்பதை, நம் தூப்புல் வள்ளலாம் ஸ்வாமி தேஶிகன், தனது யதிராஜ ஸப்ததியில் பதினொன்றாவது ஶ்லோகமாக,

**உபவீதிநம் ஊர்த்வ புண்ட்ர வந்தம்**
**த்ரிஜகத் புண்ய பலம் த்ரிதண்ட ஹஸ்தம்|**
**ஶரணாகத ஸார்த்தவாஹ மீடே**
**ஶிகயா ஶேகரிணம் பதிம் யதீநாம்||**

என்று அருளிச் செய்துள்ளார்.

அத்வைத ஸந்யாஸிகள் உபநயனாதிகளை க்ரமமாக பூர்வாஶ்ரமத்தில் ஶ்ரேஷ்டுவாக (நன்றாக) அநுஷ்டித்திருந்த போதிலுங்கூட, ஸந்யஸ்த ஆஶ்ரமத்தை ஸ்வீகரித்த பிறகு பூணூலை அறுத்தெறிந்துவிட்டு ஸூத்ரர்களைப் போன்று வெற்றுடம்புடனே இருப்பர். ஆனால் நம் விஸிஷ்டாத்வைத யதியான ஸ்ரீபாஷ்யகாரரும், அவர் வழிவந்த வைஷ்ணவ ஸந்யாஸிகளும் மூன்று இழையினாலான ஒரு யக்யோபவீதத்தையும், ஒரு இழையிலான மற்றொரு யக்யோபவீதத்தையும் உபவீதமாக தரித்திருப்பர். இக்காரணங்கொண்டே ஸ்வாமி தேஶிகன் **"உபவீதிநம்"** என்று அருளிச் செய்திருக்கிறார்.

அத்வைத ஸந்யாஸிகள் பஸ்மத்தாலான (சாம்பலினாலான) த்ரியக் புண்ட்ரத்தை நெற்றியில் தங்களது இடப்புற காதோரத்திலிருந்து வலப்புற காதோரம்வரை அணிந்திருப்பர். ஆனால் விஶிஷ்டாத்வைத ஸந்யாஸியான நம் ராமாநுஜரோ, புண்ட்ரமெனும் திருமண் மற்றும் ஸ்ரீசூர்ணத்தை தனது நெற்றியில், மூக்கின் அடியிலிருந்து ஆரம்பித்து ஊர்த்வமாக (கீழிருந்து மேலாக) தரித்திருப்பர். இதையே நம் தூப்புல் வள்ளல் **"ஊர்த்வ புண்ட்ர வந்தம்"** என்று அருளிச் செய்திருக்கிறார்.

அத்வைத ஸந்யாஸிகள் தங்களது கையில் ஒரு நீண்ட இளமூங்கிலினால் ஆன குச்சியை மட்டுமே பிடித்திருப்பர். இக்காரணத்தினாலேயே உலகோர் அத்வைத ஸந்யாஸிகளை **"ஏக தண்டி"** என்பர். ஆனால் நம் வைஷ்ணவ ஸந்யாஸிகளோ கையில் நீண்ட இளமூங்கிலினால் ஆன மூன்று குச்சிகளை ப்ருதிவி, திவம், அந்தரிக்ஷம் என்ற மூவுலகங்களின் புண்ணிய பலனாக, அதாவது த்ரிதண்டமாக பிடித்திருப்பர். இக்காரணங்கொண்டே வைஷ்ணவ ஸந்யாஸிகள் **"த்ரிதண்டி"** என்றழைக்கப்படுவர். இதைத்தான் ஸ்வாமி தேஶிகன் **"த்ரிஜகத் புண்ய பலம் த்ரிதண்ட ஹஸ்தம்"** என்று அருளிச் செய்திருக்கிறார்.

அடையப்படும் பிரும்மம், அடைபவனான ஜீவன், அடையும் உபாயம், இதுவரை நம்மை அடையவொட்டது தடுக்கும் தடை, அடைவதினால் கிடைக்கப்பெறும் புருஷார்த்தம் ஆகிய ஐந்தின் அதாவது அர்த்த பஞ்சகத்தின் அறிவை சீடர்களுக்குப் புகட்டி அவர்களை முத்தத்வங்களான சித், அசித், ஈஶ்வரன் பற்றிய உண்மை நிலையை எடுத்துரைத்து, ப்ரபத்தி என்றழைக்கப்படுவதான ஶரணாகதியை ஶ்ரிய:பதியின் திருவடித் தாமரைகளில் பண்ணப் பணித்து அவர்களின் ஆத்மோஜ்ஜீவனத்திற்கு வழி வகுப்பர். இதையே நம் ஸ்வாமி தேஶிகன் **"ஶரணாகத ஸார்த்தவாஹ மீடே"** என்று அருளிச் செய்திருக்கிறார்.

நம் விஶிஷ்டாத்வைத ஸந்யாஸிகள், அத்வைத, த்வைத ஸந்யாஸிகளைப் போல் தலைமயிரை மழுங்க சிரைத்து முண்டனம் செய்து கொள்ளாமல், ஒன்று சேர முடியப்பட்ட ஶிகையை (குடுமியை) உடையவர்களாய் இதர ஸம்ப்ரதாய யதிகளைப் போலன்றி விலக்ஷணமாக இருப்பர். இக்காரணங்கொண்டே நம் ஸ்வாமி தேஶிகன் **"ஶிகயா ஶேகரிணம்"** என்று அருளிச் செய்திருக்கிறார்.

மேலும் நம் தர்ஶந ஸ்தாபகரான ஸ்ரீ பாஷ்யகாரர், இப்படிப்பட்ட விலக்ஷணமான விசிஷ்டாத்வைத யதிகளுக்கெல்லாம் தலைவராக விளங்கியதை **"பதிம் யதீநாம்"** என்று அருளிச் செய்திருக்கிறார்.

அத்வைத ஸங்யாஸிகள் துறவறம் மேற்கொண்டவுடன் ஸந்த்யா-வந்தனாதிகளையும் விட்டுவிட்டுத் தங்களையே ப்ரஹ்மமாக நினைக்கின்றனர். ப்ரஹ்மத்திற்கு பாபம், பசி, தாகம், தூக்கம், வருத்தம், மூப்பு, இறப்பு என்பவைகள் இல்லாதபோது, இவர்களுக்கு மட்டும் இவைகள் ஏன் இருக்கின்றன?

இந்த சமயத்தில் அஸ்மதாசார்யன் ஸந்த்யாவந்தன பாஷ்ய காலக்ஷேபத்தின் போது ஸாதித்த அத்வைத ஸங்யாஸி ஒருவரைப் பற்றிய பரிஹாஸமான கதையும், அதைப் படம் பிடித்துக் காட்டும் ஶ்லோகமும் அடியேனின் நினைவிற்கு வருகின்றது.

ஒரு அத்வைத ஸங்யாஸி எம்பெருமானுடைய உத்ஸவத்தில் பெருமாளை ஸேவிக்கப் போனானாம். சாயங்கால வேளை வந்தது. அடியவர்கள் அனைவரும் ஸாயம் ஸந்த்யாவந்தனத்தைச் செய்வதற்காக புஷ்கரணிக்குப் போனார்கள். ஒரு வைணவ அடியவர் அந்த அத்வைத ஸங்யாஸியிடம், "சூரியன் அஸ்தமிக்கப் போகிறது. இது ஸந்த்யாவந்தனத்திற்கு ஏற்ற யுக்தமான காலம். வாரும், ஸாயம் ஸந்தயாவந்தனத்தைச் செய்யச் செல்வோம்" என்று கூறினாராம்.

அதற்கு அந்த அத்வைத ஸங்யாஸி, "நானோ ப்ரஹ்மம். அதனால் ப்ரஹ்மமான எனக்கு, ஸந்த்யாவந்தனாதிகளைப் பண்ண வேண்டிய அவசியமில்லை" என்று கூறினார். இந்த பதிலைக் கேட்ட அவ்வடியவர், தான் மட்டும் புஷ்கரணிக்குச் சென்று ஸாயம் ஸந்த்யாவந்தனத்தை க்ரமமாக செய்து முடித்து விட்டுத் திரும்பி வந்தார். அவர் அந்த ஸங்யாஸியின் அருகில் வரும்பொழுது பெருமாளுக்கு கண்டருளப் பண்ணப்பட்ட குஞ்சாலாடு என்ற பிரஸாதத்தை ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டு எல்லோருக்கும் விநியோகம் செய்ய ஆரம்பித்தார் ஒருவர். இதைக் கண்ணுற்ற அந்த அத்வைத ஸங்யாஸி, குஞ்சாலாடை வாங்கிச் சாப்பிடுவதற்காக தன்னுடைய ஏகதண்டத்தை கையிலேந்திக் கொண்டு தாவித் தாவி ஓடினான்.

"ஸந்த்யாவந்தனத்தைச் செய்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்த அவ்வைணவ அடியவர், ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டிய வேளையில் **நான் ப்ரஹ்மம்** என்று நினைக்கின்றாய். குஞ்சாலாடு விநியோகம் பண்ணும் வேளையில் தடியை எடுத்துக் கொண்டு ஓடுகிறாயே" என்று பரிகஸித்து,

**ஸந்த்யாவந்தன வேளாயாம் ப்ரஹ்மா அஹம் இதி மந்யஸே|**
**கண்ட லட்டுக வேளாயாம் தண்டமாதாய தாவஸி||**

என்ற ஶ்லோகத்தை இயற்றினாராம்.

ஹாரீத ஶ்ம்ருதியானது, ஆறாவது அத்யாயத்தில், "**க்ருத ஸந்த்யஸ் ததோ ராத்ரிம் நயேத் தேவக்ருஹாதிஷு......**" என்று ஆரம்பிக்கும் ப்ரகரணத்தில்,

**த்ரிதண்ட ப்ருத் யோ ஹி ப்ருதக் ஸமாசரேத்**
**ஶாந: ஶநைர் யஸ்து பஹிர்முகாக்ஷ:|**
**ஸம்முச்ச ஸம்ஸார ஸமஸ்த பந்தநாத்**
**ஸ யாதி விஷ்ணோர் அம்ருத ஆத்மந: பதம்||**

(ஸந்யாஸியானவன் ஸாயம் ஸந்த்யையை செய்துவிட்டு, பிறகு ராத்ரி வேளையை தேவாலயம் முதலானவிடங்களில் கழிக்கக் கடவன். த்ரிதண்டம் தரித்த எந்த ஸந்யாஸியானவன் இந்த்ரியங்களை வெளிவிஷயங்களில் செல்லாமல் அடக்கி க்ரமமாக இவ்வாறு நடக்கிறானோ, அவன் ஸம்ஸாரத்திலுள்ள எல்லா பந்தங்களிலிருந்தும் விடுபட்டு அழிவற்ற விஷ்ணுவின் பதத்தை அடைகிறான்.)

என்று கூறுகின்றது.

இதனால் தான் நம் தர்ஶந ஸ்தாபகரான ஸ்ரீ பகவத் ராமாநுஜரும், தன்னுடைய ஸ்ரீ பாஷ்யமென்ற க்ரந்தத்தின் லகு பூர்வபக்ஷத்தில்,

**வர்ணாஶ்ரம விஶேஷ ஸாத்ய ஸாதந இதி கர்த்தவ்யதாத் அநந்த**
**விகல்பாஸ்பதம் கர்ம ஸகல பேத தர்ஶந நிவ்ருத்தி ரூபா**
**அஜ்ஞாந நிவ்ருத்தே: கதம் இவ ஸாதநம் பவேத்||**

என்று அருளிச் செய்திருக்கிறார்.

(இதன் இரண்டாவது பகுதி விரைவில்)

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:|

**The Known and The Unknown**

-----------------------------------------

**Episode-014 (2 of 3)**

**ஸ்வாமி தேசிகன் அநுபவித்த யதி ஸார்வபௌமர்**

**==========================================**

**(தொடர்ச்சி)**

இத்தகைய அருமைகளும், பெருமைகளும் ஒருங்கே வாய்ந்த இந்த யதிராஜர் யார்? இவர் ஆதிசேஷனின் அபராவதாரமாகக் கூறுவர் சிலர். ஆனால் நம் ஸ்வாமி தேசிகனோ அல்லது திருவரங்கத்தமுதனாரோ, தங்களது யதிராஜ ஸப்ததியிலேயோ அல்லது இராமாநுச நூற்றந்தாதியிலேயோ எவ்விடத்திலும் ஸ்ரீபாஷ்யகாரரை ஆதிசேஷனின் அபராவதாரமாகக் குறிப்பிடவில்லை.

பகவான் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து க்ருஷ்ணாவதாரம் பண்ணுவதற்காகப் புறப்படும் சமயத்தில், "பூலோகத்தில் அர்ஜுனனை வ்யாஜமாக வைத்துக்கொண்டு கீதையை அதிலும் குறிப்பாக சரம ச்லோகத்தை உபதேசித்து, சரணாகதி மார்க்கத்தை அனைவரையும் பின்பற்றச் செய்து, அனைவரும் ஸ்ரீவைகுண்டத்தை வந்தடையும்படி செய்வேன்" என்று பிராட்டியிடம் தூளுரைத்துவிட்டு க்ருஷ்ணனாக அவதரித்தார். ராமாவதாரம் முடிந்த பிறகாவது அயோத்யாவாஸிகளை ஸ்ரீவைகுண்டத்திற்கு, **"அன்று சராசரங்களை வைகுந்தத்தேத்தி"** என்று குலசேகராழ்வார் அருளிச் செய்துள்ளதைப் போன்று அழைத்து வந்தார். ஆனால் க்ருஷ்ணாவதார முடிவில் அனைவரையும் கொன்று குவித்துவிட்டுத் தன்னந்தனியாக தன்னடிசோதியான ஸ்ரீவைகுண்டத்திற்கு வந்தார்.

பிராட்டியோ, "உங்கள் சமத்து எனக்கு மிக நன்றாகத் தெரியும். பேசிப் பேசியே காரியத்தைக் கெடுத்தீர். நான் இப்பொழுது என் சிஷ்யனான விஷ்வக்ஸேநனை பூலோகம் அனுப்புகிறேன். பிறகு பாருங்கள்" என்று ஸேனைமுதலியாரை நம்மாழ்வாராக பிறப்பிக்கச் செய்து, அவரின் சதுஷ் ப்ரபந்தங்களினால் சரணாகதியை பரவச்செய்து, அனைவரும் சாரிசாரியாக ஸ்ரீவைகுண்டத்தை அடையும்படிச் செய்தாள்.

பின்னர் இடையில் குத்ருஷ்டி, குமதிகளுடைய ஆக்கிரமிப்பினால் தொன்மையானதான நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் நிசிக்க, பகவானின் பஞ்சாயுதங்களான பாஞ்சஜன்யம் என்பதான சங்கு, ஸுதர்சநம் என்பதான சக்ரம், சார்ங்கம் என்பதான வில், நந்தகம் என்பதான வாள், கௌமோதகீ என்பதான கதை ஆகியவைகளையே ஸ்ரீ பகவத் ராமாநுஜராக பூவுலகில் அவதரிக்கச்செய்து, திரும்பவும் பிராட்டி தனது சிஷ்யனான ஸேனை முதலியாரை அழைத்து அவ்வாறு அவதரிக்கப்போகும் ஸ்ரீராமாநுஜருக்கு பின்னர் ஸந்யாஸாச்ரமம் ஸ்வீகரிக்கும்பொழுது விஷ்வக்ஸேநரின் கையில் உள்ள பிரம்பே

ஸ்ரீபாஷ்யகாரரின் த்ரிதண்டமாக ஆகவேணுமாய் ஆக்ஞாபித்தாள். இதை நம் ஸ்வாமி தேசிகன் தனது யதிதாஜ ஸப்ததி 12வது ஸ்லோகத்தில்,

**ப்ரதயங் விமதேஷூ தீக்ஷ்ண பாவம்**
**ப்ரபுரஸ்மத் பரிரக்ஷணே யதீந்த்ர:|**
**அப்ருதக் ப்ரதிபந்ந யங் மயத்வை:**
**வவ்ருதே பஞ்சபி: ஆயுதைர் முராரே:||**

என்றும், மேலும் யதிதாஜ ஸப்ததி 32வது ஸ்லோகத்தில்,

**"விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ் த்ரிதண்ட:"**

என்றும் அருளிச் செய்துள்ளார். இக்கருத்தையே திருவரங்கத்தமுதனாரும் தனது இராமாநுச நூற்றந்தாதி 33வது பாசுரத்தில்,

**அடையார் கமலத்து அலர்மகள் கேள்வன், கையாழியென்னும்**
**படையொடு நாந்தகமும் படர் தண்டும், ஒண் சார்ங்க வில்லும்**
**புடையார் புரிசங்கமும் இப்பூதலம் காப்பதற்கென்று-**
**இடையே, இராமாநுச முநியாயின இந்நிலத்தே.**

என்று அருளிச் செய்திருக்கின்றார்.

ஸ்ரீ ராமபிரானின் தம்பி ராமாநுஜனாக (லக்ஷ்மணனாக) ஆதிஸேஷன் அவதரித்தார். அவ்வாதிஸேஷனே, பலராமனாக அவதரித்த பொழுது பகவான் ஸ்ரீக்ருஷ்ணனே, அந்த பலராமனின் தம்பி ராமாநுஜனாக அவதரித்தார். ஆனால் பகவான் ஸ்ரீமந் நாராயணன் மற்றும் ஆதிஸேஷன் இருவரும் சேர்ந்தே, ஸ்ரீ பகவத் பாஷ்யகாரராக அவதரித்தனர்.

பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் இதர க்ஷூத்ர தெய்வங்களான பிரம, ருத்ர, இந்திராதிகளின் கொழுப்பை அடக்கினான். அதே போன்று நம் யதிராஜரும் வேதத்திற்குத் தவறான அர்த்தங்களைக் கூறிய பரமதவாதிகளை வென்று, நம் விசிஷ்டாத்வைதக் கோட்பாடுகளை நிலைபெறச் செய்தார். வேதம் களிப்புற்றது. சிறந்த அத்வைதியும் தனது குருவுமான யாதவப்ரகாசனையே தனது சீடனாக்கி அவனையும் துரவறம் பூண வைத்தார். வேதத்திற்கும், பகவத் கீதைக்கும், பிரம்ம சூத்திரங்களுக்கும் பரசமயவாதிகள் செய்த அபார்த்தங்களையெல்லாம் நிரசித்து அவைகளின் யதாவஸ்தித (உள்ளது உள்ளபடியான) அர்த்தங்களைக் கூறி, நம் வைணவ ஸித்தாந்தத்தை புநருத்தாரணம் செய்துவித்தார். இக்கருத்தை ஸ்வாமி தேசிகன் யதிராஜ ஸப்ததி 13வது ஶ்லோகத்தில்,

**ஶமிதோதய ஶங்கராதி கர்வ:**
**ஸ்வபலாதுத்ருத யாதவ ப்ரகாஶ:|**
**அவரோபிதவாந் ஶ்ருதேர் அபார்த்தாந்**
**நநு ராமாவரஜஸ் ஸ ஏஷ பூய:||**

என்றும், மேலும் திருவரங்கத்தமுதனார், இராமாநுச நூற்றந்தாதி 54வது மற்றும் 99வது பாசுரங்களில்,

**நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன, நாரணனைக்**
**காட்டிய வேதம் களப்புற்றது, தென் குருகைவள்ளல்**
**வாட்டமிலா வண்டமிழ்மறை வாழ்ந்தது, மண்ணுலகில்**
**ஈட்டிய சீலத்து, இராமாநுசன்றன் இயல்வுகண்டே.**

**தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும், தாழ்சடையோன்**
**சொற்கற்ற சோம்பரும் சூனிய வாதரும், நான்மறையும்**
**நிற்கக் குறும்புசெய் நீசரும் மாண்டனர் நீணிலத்தே**
**பொற்கற்பகம், எம் இராமாநுசமுனி போந்தபின்னே.**

என்றும் அருளிச் செய்திருக்கின்றனர்.

(இதன் மூன்றாவது பகுதி விரைவில் வெளிவரும்)

**ஸ்ரீமதே ராமாநுஜாய நம:|**

**The Known and The Unknown**

**-------------------------------------------**

**Episode-014 (3 of 3)**

**ஸ்வாமி தேசிகன் அநுபவித்த யதி ஸார்வபௌமர்**

**==========================================**

**(தொடர்ச்சி)**

இமயமலையிலிருந்து பெருகுகின்ற கங்கா ப்ரவாஹத்தைப் போன்றும், "புநரபி ஜநநம், புநரபி மரணம்"என்று திரும்பத் திரும்ப பிறப்பதும் இறப்பதுமாக இருக்கின்ற ஸம்ஸாரிகளான ஜீவாத்மாக்கள் ஸம்ஸாரமாகிற துன்பமெனும் கடும் வெப்பத்தை, கற்பக விருக்ஷம் போன்று நிழல் கொடுப்பதான சரணாகதியினால் தொலைத்து இளைப்பாற்றுவது போன்றும், உதய சூரியன் இருளை அகற்றுவதைப் போன்று நம் அக்ஞானமாகிய இருட்டை அகற்றியும், அனைத்து இதர மதஸ்தர்களின் உண்மைக்குப் புறம்பான மதக் கோட்பாடுகளை வெட்டி மாய்த்து, சின்னாபின்னப்படுத்தி, அவர்களெல்லோரும் நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை சாரும்படி செய்தும், முழு நிலவானது வேதமென்னும் திருப்பாற்கடலில் உதிப்பதைப் போன்றதுமான ப்ரபாவத்தை உடையவராக யதி ஸார்வபௌமரான ஸ்ரீ பகவத் பாஷ்யகாரர் பிரகாசிக்கிறாரென்பதை,

**ஜயதி ஸகல வித்யா வாஹிநீ ஜந்ம சைல:**
**ஜநி பத பரிவ்ருத்தி ச்ராந்த விச்ராந்தி சாகீ|**
**நிகில குமதி மாயா சர்வரீ பாலஸூர்ய:**
**நிகம ஜலதி வேலா பூர்ண சந்த்ரோ யதீந்த்ர:||**

என்று நம் தூப்புல் வள்ளல் பறைசாற்றுகின்றார்.

மேலும், கணாதனின் வைசேஷிக மதமும், கபிலரின் சாங்க்ய மதமும், குமாரில பட்டரின் மீமாம்ஸா மதமும், புத்தரின் பௌத்த மதமும், சங்கரரின் அத்வைத மதமும் உலகில் தலையெடுத்து மக்களை பரமபதமடையாமல் பாழ்பண்ணிய பொழுது நம் ராமாநுஜரின் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமும் அதைச் சார்ந்த சரணாகதி தத்துவமும் உதித்தெழுந்து மக்களை நல்வழிப்படுத்தியதை,

**கணாத பரிபாடிபி: கபில கல்பநா நாடகை:**
**குமாரில குபாஷிதை: குரு நிபந்தந க்ரந்திபி:|**
**ததாகத கதாசதை: தததநுஸாரி ஜல்பைரபி**
**ப்ரதாரிதம் இதம் ஜகத் ப்ரகுணிதம் யதீந்த்ரரோக்திபி:||**

என்று நம் ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்கின்றார்.

"விஶிஷ்டாத்வைதமென்ற பகவத் ஸ்ரீ பாஷ்யகாரருடைய கொள்கை சுமார் 1000 வருடங்களுக்குள் வந்த புதிதான ஒன்றேயென்று சொல்கிறீர்களா? சரி. அது அப்படியே ஆகுக. அதனால் என்ன? நீங்கள் அதற்கு முன்பும் சமயக் கொள்கைகள் இருந்தனவென்பதை ஒப்புக் கொள்கிறீர்களல்லவா? அப்படி முன்பிருந்த மதக் கொள்கைகள் எதை ஸ்தாபித்தன? புதிய கொள்கைகள் வந்த பின்னர் பழைய கொள்கைகளுக்கு மதிப்பில்லாமல் போய் விடுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோமல்லவா? எந்த மதக் கொள்கையுமே, அதை முதலில் கூறப்படும் பொழுது புதியதுதானே? நாட்கள் செல்லச் செல்ல அவைகளும் பழமையாகின்றதல்லவா? பராஶரர், வியாஸர், டங்கர், த்ரமிடர், போதாயனர், குஹ தேவர், பாருசி, நாதமுநி, ஆளவந்தார் போன்ற மஹான்கள் தாங்களும் அநுஷ்டித்து, இவ்வுலகோரும் அதைப் பின்பற்றும்படி கூறிய கொள்கைகள் பழமையானது இல்லையா?

இப்படி இக் கொள்கைகள் காலங்காலமாக பின்பற்றப்பட்டு, அதற்கொரு எதிர்ப்பு இல்லாது வளர்ந்து வந்ததினால், அதைப்பற்றி பின்வந்தோர், தங்களின் மதத்தைப் பற்றி எதுவும் கூறாமல் விட்டனர். அதனால் இவ்விஶிஷ்டாத்வைதக் கொள்கைகள் சமீபத்தியது என்றோ, புதிதான ஒன்று என்பதோ இல்லையே?" என்பதை வாதத்தில் கை தேர்ந்த வழக்கறிஞரைப் போன்று,

**யதி க்ஷ்மா ப்ருத் த்ருஷ்டம் மதம் இஹ நவீநம் தததபி கிம்?**
**தத: ப்ராகேவ அந்யத் வததததபி கிம் வர்ண நிகஷே?|**
**நிஶாம்யந்தாம் யத்வா நிஜமதி திரஸ்கர விகமாத்**
**நிராதங்க அஷ்டாங்க த்ரமிட குஹதேவ ப்ரப்ருதய:||**

என்று நம் ஸ்வாமி தேஶிகன் அருளிச் செய்துள்ளார்.

"மனிதர்களாகப் பிறந்த நாம் அனைவரும் பகவானின் ப்ரக்ருதியாகிற மாயையில் உழன்று சிக்கித் தவிக்கின்றோம். இது ஒரு மிகப் பெரிய நீண்ட பயங்கரமான இரவான காளராத்ரியைப் போன்றது. ஆனால் எவர் நம் ராமானுஜரின் நவ க்ரந்தங்களான ஆழ்கடலில் மூழ்கித் திளைக்கின்றனரோ, அவர்களுக்கு பிறவியெனும் மிக நாட்பட்ட அதிதீவிர நோயிலிருந்து (chronicle Disease) விடுபடுவதற்காக ஶரணாகதியென்னும் ஓர் அருமருந்து கிடைக்கின்றது. நம் தர்ஶந ஸ்தாபகரான ஸ்ரீராமானுஜர் இப்பூவுலகில் நம்மை உஜ்ஜீவிப்பதற்காகப் பிறந்து, தீயவைகளையும், தவறான அறிவையும் நீக்குவதற்குத் துணை புரிகிறார். அதனால் தான் வேதாந்த தேஶிகனான என்னுடைய மனது, அவரது உபதேஶம் மட்டுமே கருத்துச் செறிவுடனிருப்பதால், அவர் காட்டிய வழியில் சென்றிட விழைகிறது" என்பதை,

**அர்த்யா திஷ்டதி மாமிகா மதிரஸாவாஜந்ம ராஜந்வதீ**
**பத்யா ஸம்யமிநாமநேந ஜகதா மத்யாஹிதச்சேதிநா|**
**யத் ஸாரஸ்வத துக்த ஸாகர ஸுதா ஸித்த ஔஷதா ஸ்வாதிநாம்**
**ப்ரஸ்வாபாய ந போபவீதி பகவந் மாயா மஹா யாமிநீ||**

என்று நம் ஸ்வாமி தேசிகன் தனது யதிராஜ ஸப்ததியில் அருளிச் செய்துள்ளார்.

இத்தகைய மிக்க பெருமை வாய்ந்த ஸ்ரீ பாஷ்யகாரரை நம் ஆசார்ய பரம்பரையில் நாயகக் கல்லாக நாம் பெற்றது நமது ஸுக்ருத விசேஷமே. வேதமாகிய சாஸ்திரத்தின் அல்லது ப்ரஹ்ம ஸூத்ரத்தின் நேர்மையான வழியைக் கெடுப்பவர்களான ஹேது வாதம் பண்ணுபவர்களுக்கு ஓர் ஒப்பற்ற யானையாகத் தோன்றி, அவர்களின் வாதங்களான வாழைத் தோப்பை நாசம் செய்த உபகாரரும், ஏரணி புகழை உடையவருமான நம் தர்சந ஸ்தாபகரான ஸ்ரீ ராமாநுஜரின் இனிமையான ஸ்ரீ ஸுக்திகளை மனத்திற்கு அலங்காரமாகக் கொண்டிருக்கும் நாம் கெட்ட செயல்களை இனிமேல் மனதினாலும் நினைக்கமாட்டோமென்பதை,

**ஆரண நூல் வழிச் செவ்வை அழித்திடும் ஐதுகர்க்கு ஓர்**
**வாரணமாய் அவர் வாதக்கலிகள் மாய்த்த பிரான்**
**ஏரணிகீர்த்தி இராமாநுசமுநி இன்னுரைசேர்**
**சீரணி சிந்தையினோம் சிந்தியோம் இனித் தீவினையே**

என்று நம் தூப்புல் வள்ளல் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் குருபரம்பராதிகாரத்தில் அருளிச் செய்திருப்பதைப் போன்று, ஸ்ரீ பாஷ்யகாரரின் ஸ்ரீ ஸூக்திகளில் ஆழங்காற்பட்ட நாம் கெட்டவற்றை இனி மனத்தினால் நிச்சயம் நினைக்கக் கூட மாட்டோம் இல்லையா?